மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மூன்று புதிய மண்டல அலுவலகங்கள், 11 கோட்ட அலுவலகங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அந்தப் பகுதியில், அவசியம் ஏற்படின், மின் இணைப்புகளுக்கேற்ப, அரசு அதனைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, ஏற்கெனவே தொடங்கப்பட்ட அலுவலகங்களுக்குத் தேவையான அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கேனும் காலிப் பணியிடங்கள் இருந்தால், அவற்றையும் விரைவில் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

பருத்தியைக் கொள்முதல் செய்ய தனி ஆணையம்

***422—திரு. க. செல்வராஜ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தியைக் கொள்முதல் செய்து, நூற்பாலைகளுக்கு நேரடியாக விற்பனை செய்ய தனி ஆணையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 மார்ச் 30]

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பருத்தி கழகம் என்ற நிறுவனம் அமைக்கவும், தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியைக் கொள்முதல் செய்து நேரடியாக விற்பனை செய்வதற்கும், உரிய நேரத்தில் தனி ஆணையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

முற்பகல் 10-35

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு, திருப்பூர் தெற்கு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர் அண்ணன் திரு. செல்வராஜ் அவர்களின் சார்பிலும், அவர் தொகுதி மக்களின் சார்பிலும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஆணையம் ஏன் அமைக்கப்பட வேண்டுமென்றால், அப்போதுதான் ஒரு நிலையான விலை கிடைக்கும். அப்படிக் கிடைத்தால்தான், பருத்தி விளைவிக்கிற விவசாயிகளுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். இப்போது பருத்தியை வெளி மாநிலங்களிலிருந்து நாம் விலை கொடுத்து வாங்குவதால், நூலின் விலை உயர்ந்து, நூற்பாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த ஆணையம் அமைக்கப்பட்டால், விவசாயிகள், நூற்பாலைகள் மட்டுமின்றி, ஆயத்த ஆடைத் தொழிலில் ஈடுபடுபவர்களும், பெரிதும் பயன்பெறுவார்கள். எனவே, இந்த ஆணையம் அமைக்கப்படவிருக்கின்ற நல்ல சூழ்நிலையில், கடந்த காலங்களிலிருந்த சூழ்நிலைகளையெல்லாம் அரசும், நம்முடைய துறையும் கருத்திற்கொண்டு, அனைத்து நூற்பாலைகள், விவசாயிகள், ஆயத்த ஆடைப் பணிகளில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் ஆகியோருக்கு இருந்த நெருக்கடியான சூழ்நிலைகளையெல்லாம் உணர்ந்து, எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய ஓர் ஆணையமாக இந்த ஆணையம் அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகப் பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றவுடன், நான் இந்தத் துறைக்கு அமைச்சரான பிறகு, முதன்முதலில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினேன். அந்த ஆய்வுக் கூட்டத்தில், அவர்கள் வைத்த முதல் கோரிக்கை, அந்த நூற்பாலைகளுக்கு Cotton Corporation of India-விடமிருந்துதான் நூல் வாங்குகிறோம் என்றும், இது வெளி மாநிலங்களிலிருந்துதான் வர வேண்டும் என்றும், அதற்கு cess வரி 1% ஆக இருக்கிறது என்றும், அந்த cess வரியை நீக்க வேண்டுமென்று நாங்கள் கடந்த 20 ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்றும், இதுவரை எந்த அரசும் இதை செய்து தரவில்லை என்றும், நீங்கள் இதைச் செய்து தந்தீர்களென்றால், உடனடியாக Cotton Corporation of India-ன் godown-ஐ இங்கேயே அமைத்து எங்களுக்கெல்லாம் supply செய்வார்கள் என்றும், அதையும் private traders-ஐ வைத்து supply செய்வார்கள் என்றும் சொன்னார்கள். நான், உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்து, அவர்கள் வைத்த கோரிக்கையைப் பற்றி எடுத்துக் கூறினேன். இதைச் சொன்னவுடன் யாரும் உடனே செய்துவிட மாட்டார்கள். இது உண்மையா, பொய்யா என்று பார்த்து, இது தேவையா என்பதை ஆய்ந்தறிந்துதான் செய்வார்கள். ஆனால், இதுபோன்ற ஒரு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாம் பார்க்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொன்னவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10, 15, 20 நாட்களிலேயே சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துச் சொல்லி, cess வரி 1%-ஐ நீக்கிய ஒரே முதலமைச்சர் யாரென்றால் அது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு பிறகு, அன்றைய தேதியில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டு வருடங்களுக்கு முன்பு cotton விலை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். உடனடியாக தனியாரெல்லாம் இங்கே வந்து தொழிலைத் தொடங்க ஆரம்பித்தார்கள். இன்னும் CCI–Cotton Corporation of India தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்படவில்லை.

அதற்குப் பிறகு, cotton விலை கடந்த ஆண்டு அதிகமாக இருந்ததற்குக் காரணம், 11% import duty இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் Thiru Piyush Goyal அவர்களைப் பல முறை

2023 மார்ச் 30]

பார்த்து, தொடர்பு கொண்டு பேசி, அந்த 11% import duty-ஐ நீக்கியதும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை நல்ல கோரிக்கைதான். அதில் ஒன்றும் சந்தேகமே கிடையாது. நம்முடைய மொத்த தேவை 120 இலட்சம் பேல்கள். ஆனால், தமிழ்நாட்டில் இதற்கு முன்னர் 5 இலட்சம் பேல்கள்தான் விவசாயிகள்மூலம் தயாராகி வந்தன. இப்போது அது increase ஆகி, கிட்டத்தட்ட 15 இலட்சத்திற்கு வந்திருக்கிறது. 7 இலட்சம் பேல்கள் import செய்கிறோம். சுமார் 100 இலட்சம் பேல்கள் வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி, CCI போன்ற அமைப்புகள் தேவை. தமிழ்நாட்டில் பஞ்சு பேல்களை தங்குதடையின்றி விநியோகம் செய்வதற்கு, தனியார் நூற்பாலை பிரதிநிதிகளும் SIMA-Southern India Mills' Association என்ற கூட்டமைப்பும், கூட்டுறவு நூற்பாலை பிரதிநிதிகளும் சேர்ந்து Public-Private Partnership model-ல் தமிழ்நாடு பருத்திக் கழகம் என்ற பெயரில் ஆரம்பித்தோம் என்றால், நிச்சயமாக அது நன்றாக இருக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் ஆலோசித்து நிச்சயமாக அதைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

பேருந்து வசதி

***52655—திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணியிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?